**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
-----
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, No.I, PERAMBALUR.**

| | | |
|---|---|---|
| Case Number | : | CC.No. 113/2011 |
| Prosecution Witness | : | **அ.சா.4** |
| Name | : | **சௌகத்அலி** |
| Father's/Husband Name: | : | அப்துல்சமது |
| Address : | : | 23/103 கிழக்கு மெயின்ரோடு லப்பைகுடிக்காடு |
| Age | : | 72/2022 |

தேதி: 18/05/2022

**முதல் விசாரணை :** சாட்சி சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது.

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் ஷபி மெடிக்கல் என்ற பெயரில் மேற்கண்ட முகவரியில் தொழில் நடத்தி வருகிறேன். ஆஜர் 2-ம் எதிரி நஷீர் அகமது என்பவர் எங்களது ஊரைச்சேர்ந்தவர். அவரை எனக்கு தெரியும். இந்த வழக்கின் புகார்ததாரர் அப்துல்சஜமீல்சாயபு என்பவரை எனக்கு தெரியும் அவர் எனது தாய்மாமா. சர்வே எண்.71 ஏ 17 மற்றும் 18-ல் எனது மாமா எனக்கு விபரம் தெரிந்த நாள் முதல் எனது மாமா பயிரிட்டு வருகிறார். 2004-ஆம் ஆண்டு எனது மாமா ஒரு டிராக்டர் வாங்குவதற்காக கனரா வங்கி லப்பைக்குடிக்காடு கிளையில் அந்த இடத்திற்கு உரிய பட்டா சிட்டா மற்றும் அடங்கல்களை சமர்ப்பித்தது லோன் பெற்றார். 2009-2010 ஆண்டில் நாங்கள் பாகப்பிரிவினை செய்வதற்காக வாலிகண்டபுரம் சார் பதிவாளர் அலுவலகத்தில் வில்லங்க சான்று பெறுவதற்காக விண்ணப்பித்தோம். வில்லங்க சான்றை பெற்ற பிறகு

UNOFFICIAL COPY

அதில் அப்துல்புகாரி ஜமீல் என பத்திரம் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்பதை தெரிந்துகொண்டோம். எனது மாமாவின் பெயர் ஜியாவுதீன் மகன் அப்துல்ஜமீல் ஆஜர் எதிரியின் தகப்பனார் பெயர் புகாரிஅப்துல்ஜமீல். இந்த விபரத்தை தெரிந்துகொண்ட பிறகு ஆஜர் எதிரியின் மைத்துனர் 3-ம் எதிரியிடம் சென்று கேட்டோம். அவர் எந்த பதிலும் கூறவில்லை. அதனால் வேப்பந்தட்டை துணை-தாசில்தாரர் முத்தையா என்பவர் கணிணி பட்டா வழங்கியுள்ளார் என்றும் அதனால் அவரை சென்று நாங்கள் பார்த்தபோது அவர் உங்களால் ஆனதை பார்த்துக்கொள்ளுங்கள் என கூறிவிட்டார். நாங்கள் லோன் வாங்குவதற்காக ஆவணங்கள் சமர்ப்பித்தபோதும் அந்த ஆவணங்களை முத்தையா என்பவர் தான் கையொப்பமிட்டு வழங்கியுள்ளார். அதனால் அ.சா.1 காவல் துறையில் புகார் கொடுத்தார். அந்த புகாரின் அடிப்படையில் காவல் துறையினர் என்னை விசாரித்தனர்.

**குறுக்கு விசாரணை :**

எதிரிக்கு போதிய வாய்ப்பு வழங்கப்பட்டும் விசாரணை செய்ய முன் வராததால் விசாரணையை முடித்துக்கொள்ளப்பட்டது.

Taken down by / before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused/ pleader and admitted by the witness to be correct.

*Sd/-*
Judicial Magistrate No.I,
Perambalur.

JMNO,PBLR